ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்

வினா விடை நேரம்

வினா எண் 321

தலைப்பு:"பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பற்றி கூறப்படும் தவறான போலி வாதங்கள்-தொடர் பதிவு"

நம் அன்பிற்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் இரண்டு பக்கம் 366-373 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி: ஸ்வாமி பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு எட்டு தேவியர் உண்டு என்றும் மேலும் அவர் பதினாறாயிரம் கோபிகையருடன் வாழ்க்கை நடத்தினார் என்றும் கூறப்படுகிறதே.

இதை கேட்க தர்ம சங்கடமாக உள்ளது.

இதன் உண்மை தன்மை பற்றி எங்களுக்கு விளக்கி சொல்லுங்கள் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:

திரைபடங்களில் காண்பிக்க படுவதை பார்த்து நீங்கள் இவ்வாறு நினைக்கிறீர்கள்

நீங்கள் நினைத்து கொண்டிருக்கும் கிருஷ்ணர் வேறு. பரமாத்மாவான

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் வேறு.

இது போன்று திசைதிருப்பக்கூடிய உண்மை அல்லாத கட்டுகதைகள் பரப்பபடுவதால் இன்றைய சமுதாயத்தில் நாத்திகர்களும் ஆன்மீககத்திற்கு எதிரானவர்களும் அதிகரித்துக்கொண்டே போகிறார்கள்.

இறை பக்தியும் குறைந்து கொண்டே போகிறது.

சநாதனமான ஏகத்துவமான நித்ய சத்யமான கடவுளை சாதாரண உலக கண்ணோட்டத்தில் பார்க்கும் போது இப்படி எண்ண தோன்றுகிறது.

இந்த நவீன யுகத்தின் கோளாறுகளில் இதுவும் ஒன்று.

தெய்வீகத்தின் வெளி தோற்றமே படைப்பே தவிர அதாவது கடவுள் படைப்பவர்-சிருஷ்டி கர்த்தா.அவர் படைக்கப்படுபவரல்ல.கடவுள் பந்தங்களுக்கு கட்டுபட்டவர் அல்ல.அவரே அனைவரையும் பந்தங்களிலிருந்து விடுவிக்கிறார்.

ஸ்ரீ கிருஷ்ணரின் எட்டு தேவியர் யார்.ஒவ்வொரு மனித இதயமும் எட்டு இதழ்களை கொண்ட தாமரை மலர் போன்றதாகும்.

மனித உடலில் சூட்சுமமான ஏழு சக்கரங்கள் இருக்கின்றன.

முதுகெலும்பின் அடியில் உள்ளது மூலாதாரம் என்றும் தலை உச்சியில் உள்ளது சஹஸ்ர சக்ரம் என்றும் அழைக்கப்படுகிறது.தியானத்தின் இறுதி நிலையான சமாதி நிலையை எட்டும் போது குண்டலினி சக்தி மூலாதாரத்திலிருந்து சஹஸ்ரத்திற்கு மேல் நோக்கி செல்கிறது.இந்த நிலையில் சஹஸ்ர சக்ரம் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையாக விரிகிறது.ஒவ்வொரு இதழும் பதினாறு வர்ணங்கள் கொண்டதாக உள்ளது.இவையே ஸ்ரீ கிருஷ்ணர் சார்ந்திருந்த பதினாறாயிரம் கோபிகைகளாக சித்தரிக்கப்படுகிறார்கள்.

உண்மையில் பிருந்தாவனத்தில் இருந்த போது கிருஷ்ணர் சிறு பையனாக இருந்தார்.அவரை விட மூத்தவர்களான கோபிகைகள் தங்கள் மகனிடம் விளையாடி மகிழ்வது போல் கிருஷ்ணரிடமும்பழகினர்.பார்க்கும் இடத்திலெல்லாம் கிருஷ்ணரே நிறைந்திருப்பதாக அவர்கள் உணர்ந்தனர்.அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் நிறமான நீல வண்ண உடைகள் நீல வண்ண வளையல்கள் என்றெல்லாம் அணிந்து மகிழ்ந்தனர்.நெற்றியில் இடும் திலகம் கூட நீல வண்ணத்தில் இருந்தது.அவர்களின் கிருஷ்ண பக்தி நாரதர் மற்றும் தேவர்களின் பக்தியையும் மிஞ்சியதாக இருந்தது.கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணர் மீது தெய்வீக பிரேமை அதிகம் கொண்டவர்களாக இருந்தனர்.அவர்கள் தெய்வீக ஆனந்தத்தை அனுபவித்தபடி எப்போதும் ஸ்ரீ கிருஷ்ணரின் புகழை பாடியவாறு இருந்தனர்.

கிருஷ்ணரின் சிறிது நேர பிரிவு கூட அவர்களை வாட்டியது.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மதுராவுக்கு புறப்பட்ட போது அதை தாங்கி கொள்ள முடியாத கோபிகைகள் உடலெல்லாம் தகிப்பது போலவும் தாங்கொணா வலியால் உடல் துடிப்பது போலவும் உணர்ந்தனர்.

தங்களிடமிருந்து ஸ்ரீ கிருஷ்ணரை பிரித்து விட்டதாக அக்ரூரரை குற்றம் சாட்டினர்.

அவர்களுடைய கிருஷ்ண பக்தி அவர்களுக்கு ஆத்மானந்தத்தை கொடுத்தது.

ஆனால் உங்களுடைய உணர்வுகளோ இந்த உலக இன்பம் சார்ந்ததாக குறுகிய பார்வை கொண்டதாக இருக்கிறது .

உங்களுடைய புரிதலின் அடிப்படையிலேயே நீங்கள் மற்றவர்களையும் பார்க்கின்றீர்கள்.

உங்கள் ஒருவரால் கூட கோபிகைகளின் உயர்ந்த ஆழமான சீறிய கிருஷ்ண பக்தியை புரிந்து கொள்ள இயலாது.அதனை மனிதர்களால் கற்பனையில் கூட அளவிட முடியாது.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி. ராதாவும்கூட பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மிகச்சிறந்த பக்தை தானே.

அவருடைய பக்தி நிகரில்லாத பிரதி பலன் எதிர்பாராத அனன்ய பக்தி

அல்லவா.

அவரை பற்றி நீங்கள் பேசும் போதெல்லாம் அதனை கேட்டு நாங்கள் ஆனந்தத்தில் மூழ்கி விடுகிறோம்.

தயவு செய்து ராதையை பற்றியும் அவரது உன்னத பக்தி பற்றியும் எங்களுக்கு மேலும் சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :

நூல்களை மட்டுமே படித்தறிவது பக்தியை கொடுத்து விடாது.பக்தியை குருவினிடமிருந்தும் பெற முடியாது.எந்த ஒரு நண்பனும் பக்தியை உங்களுக்கு கொடையாக அளித்துவிட முடியாது.உங்களுடைய ஹிருதயத்தில் இறைபக்தி இயல்பாக தோன்ற வேண்டும்.

அது வெளியிலிருந்து திணிக்கப்பட முடியாதது.

கோபிகைகளின் பக்தி தூய தன்னலமில்லாத பக்தியாகும்.அது நிலையான, மாறாத, நிலை தடுமாறாத பக்தியாகும்.

அந்த கோபிகைகளிடையே ராதா மிக முக்கியமான ஒருவராவார்.

அவர் எப்போதும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் ஒன்றியவராக இருந்தார்.உலக பற்று ஏதும் இல்லாமல் அவர் எப்போதும் இறைவனான பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை பற்றிய  நினைவுகளி

லேயே மூழ்கி இருந்தார்.

ஓர் நாள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ருக்மணி தேவியுடன் அருகிலுள்ள ஊருக்கு ரதத்தில் சென்றார்.இருவரையும் அந்த ஊர் மக்கள் மகிழ்ச்சியுடன் சிறப்பாக வரவேற்றனர்.

அப்போது கூட்டத்தில் இருந்த ஓர் பெண்ணை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஊற்று நோக்குவதை ருக்மணி தேவி கவனித்தார்.

கிருஷ்ணர் ருக்மணியிடம் அவர் தான் என்னுடைய தீவிர பக்தையான ராதை ஆவார் என்றார்.ருக்மணி தேவி தேரிலிருந்து இறங்கி  ராதையிடம் சென்று நலம் விசாரித்து பேசி விட்டு அவரை துவாரகைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.மறு நாள் ராதா துவாரகைக்கு சென்றார்.ருக்மணி தேவி வாசலுக்கு வந்து அவரை வரவேற்று அழைத்துச் சென்றார்.அவர்கள் இருவரும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீக  லீலைகளை பற்றியும் அவரது

அருமை பெருமைகளை பற்றியும்

பேசி மகிழ்ந்தனர்.ருக்மணி தேவி ராதை அருந்துவதற்கு சூடான பால் கொடுத்தார்.கிருஷ்ணரை பற்றி பேசியபடியே  அந்த சூடான பாலை வாங்கி

ராதா ஒரே மடக்கில் குடித்து விட்டார்.பிறகு ருக்மணி தேவியிடம் விடை பெற்று புறப்பட்டு சென்றார் ராதா.

வெளியே சென்றிருந்த ஸ்ரீ கிருஷ்ணர் மாலையில் வீடு திரும்பியதும் ருக்மணி என் கால் பாதங்களில் ஒரே எரிச்சலாக எரிகின்றது.என்னால் தாங்க முடியவில்லை என்றார்.அவருடைய பாதங்களில் கொப்புளங்கள் ஏற்பட்டிருப்பதை பார்த்த ருக்மணி தேவி பதறிப்போய் என்ன ஆயிற்று எனகேட்டார்.

ருக்மணி நீ ராதைக்கு சூடான பால் கொடுத்தாய்.என்னை பற்றியே பேசியபடி அந்த சூடான பாலை ராதா அப்படியே குடித்து விட்டார்.அவருடைய ஹிருதயத்தில் என்னுடைய பாதங்கள் எப்போதும் இருப்பதால் அதில் சூடான பால் பட்டதும் கொப்புளங்கள் உண்டாகி விட்டன என்றார்.

இது ராதாவின் உன்னதமா

ன பக்தியை அனைவருக்கும் உணர்துகிறது.

ஒரு நாள் ராதாவின் கிருஷ்ண பக்தியை சோதிப்பதற்காக கோபிகை ஒருவர் ராதாவிடம் ஓட்டைகள் உள்ள பானை ஒன்றை கொடுத்து அதில் யமுனா நதியிலிருந்து தண்ணீர் பிடித்து வரும்படி சொன்னார்.

ராதைக்கு பானையில் ஓட்டை இருப்பது தெரியாது.அவர் எப்போதும் போல புனிதமான கிருஷ்ண நாமஸ்மரணையில் ஈடுபட்ட வாறே நதிக்கு சென்று பானையில் நீரை நிரப்பினார்.

அவர் ஒவ்வொரு முறையும் புனிதமான ஸ்ரீ கிருஷ்ண நாமத்தை ஜெபிக்க ஜெபிக்க பானையில் உள்ள ஒவ்வொரு ஓட்டையாக மூடிக்கொண்டே வந்தது.பானை ஒழுகாததால் அதில் முழுவதுமாக நீர் நிரப்பி ராதா கொண்டு வந்தார்.இது அவருடைய பக்தியின் மாண்பை அனைவருக்கும் உணர்த்துகிறது.

ராதா என்ற பெயரில் உள்ள ரா என்பது ராதையையும் ஆதார் என்பது அடிப்படை என்பதையும் தாரா என்பது இடைநில்லா பிரவாகம்

என்பதையும் குறிக்கிறது.அவருடைய பக்தியானது வழுக்கி கொண்டு விழுகின்ற எண்ணையின் போக்கை போன்றதாகும்.

ராதா எப்போதும் ஸ்ரீ கிருஷ்ணரை பற்றிய நினைவுகளிலேயே மூழ்கி இருந்து அவருடைய திரு நாமத்தையே ஜெபித்த வண்ணம் இருந்ததால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் ராதையை பற்றியே நினைத்தவாறு இருந்தார்.

இதுவே பக்தனுக்கும் இறைவனுக்கும் இடையே இருக்க வேண்டிய அந்யோன்யமான பாவமாகும்.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி பாண்டவர்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் ஆதரவு இருந்ததால் மட்டுமே கொடிய துன்பங்களையும் கடினமான போராட்டங்களையும் சமாளிக்க முடிந்தது.பரம்பொருளான இறைவன் தன் பக்தர்கள் மீது பொழிகின்ற அன்பையும் கருணையையும் இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.மகாபாரதத்தில்

அது போன்ற சம்பவங்களை எங்களுக்கு சொல்லி அருளுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:

ஆம் ஆம் ஆம்

இது உண்மையிலும் உண்மையாகும்.

இங்கே கடவுள் பக்தர்கள் மேல் அன்பு செலுத்துகிறார் என்று சொல்வது கூட சரியல்ல.ஏனென்றால் அன்பு தான் கடவுள்.

கடவுளே அன்பு.அதனால் எப்பொழுதும் அன்பிலே வாழ்ந்திடுங்கள்.

இப்போது நீங்கள் ஒருவர் அல்லது இருவரை மட்டுமே நேசிக்கலாம்.

ஆனால் நீங்கள் அன்பாகவே ஆகிவிடும் போது அனைவரையும் நேசிக்க ஆரம்பித்து விடுவீர்கள்.

எனவே அன்பு செலுத்துபவராக மட்டும் இல்லாமல் அந்த அன்பாகவே ஆகிவிடுங்கள்.

கடவுளை அன்பின் மூலமாக மட்டுமே உணர முடியும். ஏனென்றால் அவர் அன்பின் உருவகமாவார்.

நிலவின் ஒளியை கொண்டே நிலவு தோன்றிவிட்டதை அறிந்து கொள்ள முடியும்.

அதைப் போல அன்பை கொண்டு தான் அன்பாகிய இறைவனை உணர்ந்து தெய்வானந்தத்தை அனுபவிக்க முடியும்.

பாண்டவர்கள் தங்களுக்கு கௌரவர்களால் ஏற்பட்ட துன்பங்களையும் துயரங்களையும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் உதவியினால் தான் சமாளித்து வெற்றி கொள்ள முடிந்தது.

அவர்கள் நிபந்தனை ஏதும் இல்லாத அன்புடன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை முழுவதுமாகா

சரணடைந்ததால் ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களை காப்பாற்றினார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் எந்த சூழ்நிலையிலும் பாண்டவர்களை காப்பாற்ற தயாராக இருந்தார்.

ஒரு முறை பாண்டவ சகோதரர்கள் தங்கள் தாய் குந்தி தேவி மற்றும் தரௌபதியுடன் காட்டு வழியே சென்று கொண்டிருந்தனர்.வழியில் அவர்கள் ஒரு மரத்தில் மிக பெரிய கனி ஒன்று பழுத்து தொங்குவதை கண்டனர்.அது மிக பெரிய பழமாதலால் இரவு உணவிற்கு அது போதுமானது என நினைத்தனர்.

தரௌபதி அந்த பழத்தை பறிக்க முயன்றார் முடியவில்லை.

தர்மர் தானும் சென்று தரௌபதிக்கு உதவினார்.அப்போதும் முடியவில்லை.

பிறகு பீமன் அர்சுனன் நகுலன் சகாதேவன் என அனைவரும் முயன்றும் பழத்தை பறிக்க முடியவில்லை.அப்போது தான் அவர்கள் தங்கள் காலுக்கு கீழே ஏதோ நகர்வதை உணர்ந்தனர்.

அது கரிய தலை முடியாகும்.

இது சற்று தூரத்தில் அமர்ந்து தவத்தில் ஈடுபட்டிருக்கும் பல காலமாக நீண்டு வளர்ந்து விட்ட முனிவரின் தலை முடியாகும் என்பதை கண்டனர்.அவருடைய பெயரே ரோம ரிஷியாகும்.

அவர் தான் இந்த பழத்தை பெற வேண்டும் என்பதற்காக நீண்ட நெடுங் காலமாக தவத்தில் ஈடுபட்டிருந்தார்.ஏனென்றால் அந்த பழத்தை உட்கொள்பவருக்கு பசி தாகம் போன்ற உணர்வுகள் ஏற்படாது.பாண்டவர்களோ,தாங்கள்  அந்த பழத்தை பறிக்க முயன்றதற்காக முனிவர் தங்களை சபித்துவிடுவாறோ என அஞ்சினர்.

அப்போது  தரௌபதி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் தங்களுக்கு உதவுமாறு பிரார்த்தனை செய்தார்.

உடனே கிருஷ்ணர் அவர்கள் முன் தோன்றி என்ன பிரச்சனை என கேட்டார்.பிறகு சரி நான் சொல்கிறபடி செய்யுங்கள்.

நான் போய் ரிஷியுடன் பேச்சு கொடுக்கிறேன்.சரியாக பத்து நிமிடம் கழித்து நீங்கள் வாருங்கள் என்று சொல்லிவிட்டு சென்றார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை பார்த்ததும் ரோம  ரிஷி புளங்காகிதமடைந்து வரவேற்று என் நல் வினை பேறை என்னவென்று சொல்வேன்.

இறையாகிய பரம் பொருளே என்னை தேடி வந்திருக்கிறதே என வியந்தார்.ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களுடன் பத்து நிமிடம் பேசி கொண்டிருந்த போது பாண்டவ சகோதரர்கள் அங்கே வந்தனர்.

அவர்களை பார்த்ததும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்,பாண்டவர்கள் ஒவ்வொருவருடைய பாதங்களிலும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

இதை பார்த்த ரோம ரிஷி அந்த பரந்தாமனே இவர்களை வணங்குவதால் இவர்கள் மிக உன்னதமான சாதுக்களாக இருக்க வேண்டும் என்றெண்ணி தானும் அவர்களை விழுந்து வணங்கினார்.

இதனால்  அவருடைய கோபம் தணிந்தது.

அந்த மனநிலையில் பாண்டவர்களை அவரால் சபிக்க முடியாமல் போனது.

தன் பக்தர்களை காப்பாற்ற யாருடைய காலிலும் கூட விழுந்து வணங்க இறைவன் தயங்கவில்லை என்பது பக்தர்கள் மீது  எல்லையற்ற கருணையை பொழிவதற்கு இறைவன் எப்போதும் தயாராக உள்ளார் என்பதை காட்டுகிறது.

அதே சமயம் இறைவனின் கருணையை பெறுவதற்கு பக்தனும் தகுதி உடையவனாக இருக்க வேண்டும்.

அனைவருக்கும் நன்றி. வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்

ஜெய் சாயிராம்